
# ஜெபம்

## 3



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

**ஒவ்வொரு நாளும் ஜெபியுங்கள். முதலாவது, அதைக் குறித்து தேவனிடத்தில் விசாரிக்காமல், துரிதமாக, அதிவேகமாக எந்த ஒரு முடிவையும் எடுக்காதீர்கள். "பிதாவே, நான் இதைச் செய்யட்டுமா?" என்று அவரிடத்தில் கேளுங்கள். "நான் இதைச் செய்ய வேண்டும் என்பது உம்முடைய சித்தமா?" என்று அவரைக் கேளுங்கள்.**

செய்தி: தீர்க்கதரிசியாகிய எலிசா, 54-0723, பத்தி எண் E-10

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



**ஆனால், ஒரு உண்மையான, உண்மையாகவே ஆவிக்குரியப்பிரகாரமாக உருவாக்கப்பட்டுள்ள உண்மையான விசுவாசி, அவன் தன்னுடைய வேதாகமத்தை ஒவ்வொரு நாளும் வாசிக்கிறான் மற்றும் கர்த்தரோடு பேசுகிறான்.**

செய்தி: **62-0204 — இராப்போஜனம்**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்





# ஜெபம்

மிகவும்
வல்லமையான
ஆயுதம்!

தனியாக வாருங்கள். அப்போது நீங்கள் பொது ஜனங்களிடத்தில் இருக்கும்போது, நீங்கள் ஜெபிக்கிறதைக் காட்டிலும், நீங்கள் தனித்திருக்கும்போது, ஒரு வித்தியாசமான ஜெபத்தை ஏறெடுப்பீர்கள். நீங்கள் எல்லாரும் நழுவி தனிமையாக வந்து விடுங்கள்; வெளியே போய், மிக இரகசியமாக சந்திக்கும் ஒரு ஸ்லத்தைக் கொண்டிருங்கள், அங்கே நீங்களும் கர்த்தரும் ஒரு நாளில் அநேக தடவைகள் சந்தித்து ஜெபியுங்கள்.

---

செய்தி: **பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசம், மே 1, 1955 மாலை, பத்தி எண் 8**


---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

...இரவு நேரங்களில் நான் அதிகமாகத் தூங்குவதில்லை. எப்போதும் ஜெபத்தில் இருக்கிறேன். இரவு நேரம், எல்லாப் பிசாசுகளின் வல்லமையும் காலை வரும்போது முழந்து விடுகிறது. அவைகள் உலாவி வராத நேரத்தில், அது தான் பரிசுத்த ஆவி அசைவாடி என்னுடன் பேசுகிற நேரமாக இருக்கிறது. நீங்கள் ஜெபிக்க விரும்பினால் அதிகாலையில் ஜெபிக்கச் செல்லுங்கள்; அதிகாலையில் எழுந்திருங்கள்.

செய்தி: தேவதூதனும் கட்டளையும், 50-0821, பத்தி எண் E-17

சகோ.வில்லியம் பிரன்ஹாம்





உனக்காகவே ஜெபிக்காதே; உன் சிந்தையில் மற்றவர்களைக் கொண்டு வந்து அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

செய்தி: தரித்து நில், 57-0518, பத்தி எண் E-52

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



**சகோ.வில்லியம் பிரன்ஹாம்:**

**இப்போது, இந்த முழு உலகத்திலும் உள்ளதிலேயே வலிமை வாய்ந்த ஆயுதத்தை அவர் நமக்குத் தந்துள்ளார். அது ஜெபம் என்னும் ஆயுதமே.**

***ஜெபம் என்பது, காரியங்களை மாற்றிப் போடுவதாயிருக்கிறது.***

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக தன் கால்களை முடக்கி முழங்காலில் நிற்கும் போது, அது எத்தகைய வல்லமை என்பதைக் கிறிஸ்தவர்கள் உணர்வதில்லை.

செய்தி: *என் தூதனானவர் உனக்கு முன்பாக போவார்*, 53-0213, பத்தி எண் E-7

சகோ.வில்லியம் பிரன்ஹாம்:

எல்லாமும் தாறுமாறாகிக் கொண்டு போகிறது, நாம் ஜெபத்தை நிறுத்த வேண்டும் என்பதற்கு எந்த அடையாளமும் இல்லை. எப்படியும் நாம் ஜெபித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

செய்தி: மோசேயை குறித்த போதனை, 56-0513, பத்தி எண் 84

**அவர் அதிகாலையில், இருட்டோடே
எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான
ஓரிடத்திற்குப்போய், அங்கே
ஜெபம் பண்ணினார்.**

**மாற்கு 1:35**



**சகோ.வில்லியம் பிரன்ஹாம்:**

---

**தனிமையாய் இருங்கள். பொது இடங்களில் நீ ஜெபிக்கிற தன்மையைக் காட்டிலும், நீ தனிமையாயிருந்து ஜெபிக்கிற ஜெபம் வித்தியாசமானதாய் இருக்கும். நீங்கள் எல்லோரும் தனிமையை நாட வேண்டும்; வெளியே சென்று, நீயும் கர்த்தரும் ஒருநாளில் அநேக முறை சந்திக்கிற உண்மையான ஒரு இரகசிய இடத்திற்குச் சென்று ஜெபியுங்கள்.**

செய்தி: **பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம்**, 55–0501, பத்தி எண் E-8

இயேசு ஒருபோதும் அவருடைய ஜனங்களிடத்தில், ஒரு ஜெபத்தைச் சொல்லுங்கள் என்று கூறவில்லை; “ஜெபம் பண்ணுங்கள்” என்றே கூறினார்.

செய்தி: பெர்கமு சபையின் காலம், 60–1207, பத்தி எண் 264


சகோ.வில்லியம் பிரன்ஹாம்




இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக தன் கால்களை முடக்கும்போது, அவனுக்குள் எத்தகைய வல்லமை இருக்கிறது என்பதை கிறிஸ்தவர்களே உணரவில்லை. அது எத்தகைய வல்லமை என்பதை – அவன் உணருவதில்லை.

**செய்தி:** *என் தூதனானவர் உனக்கு முன்பாக போவார், 53-0216*

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



கர்த்தருக்கு நன்றி செலுத்தாமல், நீங்கள் எந்த உணவையும் புசிக்கலாகாது. ஏனென்றால் அது தேவனுடைய வார்த்தையினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படுகிறது. பாருங்கள்? அதை நீங்கள் புசிக்கும் போது கூற வேண்டியதாவது: "கர்த்தராகிய இயேசுவே, நீர் இந்த ஆகாரத்தை எனக்காக ஆயத்தப்படுத்தினீர். இப்போது, விசுவாசத்தினாலே, இந்த ஆகாரத்தைப் பரிசுத்தப்படுத்துகிறேன்; அது எங்கள் சரீரங்களுக்கு பெலத்தை அளிப்பதாக."



செய்தி: கேள்விகளும் பதில்களும் #4, 64-0830 E, பத்தி எண் 181

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

“முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தேடுங்கள்.” அது உண்மை என்று நீங்கள் கண்டிருக்கிறீர்களா? தேவனை முதலில் வையுங்கள். முதலில் உங்கள் தசமபாகங்களைச் செலுத்துங்கள். முதலாவதாக எல்லா காரியத்தையும் செலுத்துங்கள். தேவனுக்கு செலுத்துங்கள். காலையில் முதலில் ஜெபம் செய்யுங்கள். நாள் முழுவதும் ஜெபியுங்கள். ஒவ்வொரு காரியத்திலும் தேவனுக்கு முதல் இடம் கொடுங்கள். நீங்கள் ஒரு சாட்சியாய் இருப்பீர்கள்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: **53-0405E சாட்சிகள்**




இப்பொழுது, சகோதரனே, நாம் அவனுடைய எல்லையை விட்டு முழுவதுமாக திரும்பி வந்து விடுவோம்; நாம் தேவனிடம் திரும்புவோம்; பீடத்தண்டை திரும்பி வருவோம்; இடித்துப்போட்ட பலிபீடத்தை திரும்ப கட்டுவோம். உங்கள் வீட்டைக் கட்டுங்கள். மேஜையை விட்டு சீட்டுக்கட்டுகளையும் (cards), பழைய காதல் கதைப் புத்தகங்கள் எல்லாவற்றையும் எடுத்துப்போடுங்கள். **வேதாகமத்தைத் திறந்து, வேதத்தை வாசித்து ஜெபியுங்கள். வெறுமனே முழங்கால்படியிட்டு, 'என்னுடைய குடும்பத்தையும், மேரியையும், ஜோவையும், ஜானையும், அவர்கள் யாவரையும் ஆசீர்வதியும்' என்று கூறிவிட்டு, படுக்கைக்குப் போய் விட வேண்டாம். இல்லை, ஐயா. அங்கேயே தேவனோடு தரித்திருங்கள். ஓ, என்னே.**



செய்தி:
எதிர்பார்த்தல்கள்,
61–0308, பத்தி
எண் 80

சகோ.வில்லியம்
பிரன்ஹாம்

இந்த தற்போதைய இக்கட்டு நிலையில் அமெரிக்காவிடமிருக்கும் மிகச்சிறந்த பாதுகாப்பானது தேவனுக்கு பயப்படுகிறவர்களாயிருந்து, ஜெபிக்கிற ஜனங்கள் தான் என்று உங்களுக்குத் தெரியும். அதுவே மிகச் சிறந்தது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

# செய்தி: காணக்கூடாததை நோக்கிப் பார்த்தல், *ஆகஸ்டு 16, 1950*

4. இந்த தற்போதைய இக்கட்டு நிலையில் அமெரிக்காவிடமிருக்கும் மிகச்சிறந்த பாதுகாப்பானது தேவனுக்கு பயப்படுகிறவர்களாயிருந்து, ஜெபிக்கிற ஜனங்கள் தான் என்று உங்களுக்குத் தெரியும். அதுவே மிகச் சிறந்தது. நம்மால் உற்பத்தி செய்ய முடிந்த வெடிகுண்டுகள் மற்றும் பீரங்கி வண்டிகள் எல்லாவற்றைக் காட்டிலும் அதுவே அதிக விலைமதிப்புடையது. தேவன் எப்போதுமே தமது ஜனங்களுக்காக யுத்தம் செய்வார் (God will always fight for His people). நாம்...

இந்த முழு தேசமும் மனந்திரும்பி இரட்டுடுத்தி சாம்பலில் (இருந்து - மொழிபெயர்ப்பாளர்), நம்முடைய முன்னோர்கள் நடந்த பழமை பாணியிலான வழிக்கு திரும்பி வந்து, ஒரே இசைவோடு தங்களை தேவனுக்கு ஒப்புவிப்பார்களானால், சிறிதளவு தீங்கும் நமக்கு வர முடியாது. நம்மால் உண்டுபண்ண முடிந்த வெடிமருந்து ஆலைகள் மற்றும் காரியங்கள்

எல்லாவற்றைக் காட்டிலும் (அது சரியே), நம்மால் கொண்டிருக்க முடிந்த வெடிகுண்டுகள் எல்லா வற்றைப் பார்க்கிலும் அதுவே அதிக விலைமதிப் புடையதாயிருக்கும் என்று நான் நம்புகிறேன். ஜெபத்தைப்போல மகத்தானது எதுவுமில்லை. தேவன் எதிர்காலம் எல்லாவற்றையும் தமது கரங்களில் பிடித்திருக்கிறார்.

சமீபத்தில் யாரோ ஒருவர் என்னிடம், “சகோதரன் பிரன்ஹாமே, வருங்காலத்தைக் குறித்து நீர் என்ன நினைக்கிறீர்?” என்று கேட்டார்.

நானோ, “வருங்காலம் என்ன வைத்திருக் கிறது என்று எனக்குத் தெரியாது, ஆனால் வருங்காலத்தை யார் பிடித்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும்” என்றேன். எனவே அதுதான் காரியம், தொடர்ந்து **அவரோடு** பழக்கப்படுத்திக் கொள்ள என்னால் முடியுமானால்.

# மற்ற உலகத்தார் உங்களைத் தொடர்புகொள்ள முடியாதபடி, உங்களை நீங்களே அடைத்துக்கொண்டு (Shut off), தேவனோடு தன்னந்தனியாக வந்து விடுங்கள்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

*செய்தி:* ஐக்கியம், பிப்ரவரி 12, 1956, பத்தி எண் 21

**நீ ஒரு கிறிஸ்தவனாக ஆகும்போது, நீ தேவனுடைய பிரசன்னத்தில் வர எவ்வளவாக ஏங்குவாய்.**

**நீங்கள் தேவனோடு சற்றுநேரம் தனிமை யாக வர முடிந்து, அப்படியே கரையுடன் இணைக்கும் ஒவ்வொரு கயிற்றையும்** (shoreline) **கட்டவிழ்த்து விட்டு (விலகி), இரகசிய அறைக்குள் வந்து, கதவைப் பூட்டி, உங்கள் கைகளை உயர்த்தி, அப்படியே மனதில் இருப்பவற்றை பகிர்ந்து கொள்ளும் அந்த ஐக்கியத்திற்குள்** (communion) **வரும் போது**, அது உங்கள் ஜீவியத்தில் எப்படிப்பட்ட மிகப்பெரிய சந்தோஷமாக இருக்கிற ஒரு அனுபவத்தை தேவனோடு கொண்டிருப்பதைத்

தவிர வேறொன்றை எப்பொழுதாவது கொண் டிருக்கும் ஒரு நபரும் இங்கிருக்க மாட்டார்கள்.

**ஓ, அங்கே அதைக் குறித்து ஏதோவொன் றுள்ளது, அது அற்புதமாயிருக்கிறது.**

நான் அங்கே உள்ளே அதைப் பெற்றி ருக்கிறேன், உங்களுக்கும் கூட அந்த அனுபவம் உண்டு, **அப்படியே முழங்கால்படியிட்டு, உங்களால் இனியும் அதைத் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு, அழுது கொண்டும், கண்ணீர் வடித்துக்கொண் டும் இருந்து, "தேவனே, என்னால் - என்னால் முடியவில்லை - இனியும் என்னால் இதைத் தாங்கிக்கொள்ள முடியாது" என்று கூறிக் கொண்டிருத்தல்.**

★★★★★

❷

## செய்தி: ஐக்கியம், பிப்ரவரி 12, 1956, பத்தி எண் 24

24. எனவே, **ஐக்கியம் கொள்ளும் அந்த நேரத்திலும், மனதில் இருப்பவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அந்த நேரத்திலும் (communion), அங்கே தான் தேவன் என்னிடம் பேசுகிறார்.**

அந்தவிதமாகத்தான் அதைக் குறித்து ஆவிக்குள்ளாக நாம் விரும்புகிறோம். முழுவதுமாக ஜெபித்து, ஆவிக்குள்ளாகும்படி நீங்கள் விரும்புகிறீர்களா? உங்களால் அதைச் செய்ய முடிந்த ஒரே வழி அதுதான்.

**மற்ற உலகத்தார் உங்களைத் தொடர்புகொள்ள முடியாதபடி, உங்களை நீங்களே அடைத்துக்கொண்டு (Shut off), தேவனோடு தன்னந்தனியாக வந்து விடுங்கள்.**

நீங்கள் ஏன் அதைச் செய்ய விரும்புகிறீர்கள் என்றால், பூமியின் மேல் அந்த முதலாவது ஜோடிகளாகிய, ஆதாமும் ஏவாளும் வந்தபோது, அவர்கள் அதைத்தான் செய்தார்கள்.

★★★★★

# ஓ, தேவனோடு தனித்திருக்கும் அந்த விலையேறப்பெற்ற மணிநேரங்கள்



சகோ. பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

செய்தி: குருடனாகிய பர்த்திமேயு, மார்ச் 1, 1957, பத்தி எண் 9-10

9. **உங்களை நீங்களே தனிமைப் படுத்திக் கொள்வதைக் குறித்து ஏதோ வொன்றுள்ளது என்று உங்களுக்குத் தெரியும்.**

அநேக ஜனங்கள் தாங்கள் சபைக்கு வருவது மட்டும் ஒருக்காலும் ஜெபிப்பதில்லை. ஜெபம் பண்ணுவதற்கான ஒரே இடம் சபை மட்டும் தான் என்று அநேக ஜனங்கள் நினைக்கின்றனர், **ஆனால் புருஷர்கள் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டுமென்று வேதாகமம் கூறுகிறது.**

நாம் நம்மையே தனிமைப்படுத்திக் கொள்ளும் போது, நாம் சபையில் ஜெபித் திருந்தால், நாம் எப்படி ஜெபித்திருப்

போமோ அதைக் காட்டிலும், வழக்கமாக வித்தியாசமாக ஜெபிப்போம்.

இயேசு அதைக் குறித்து கூறியிருக்கிறாரே, அந்த அந்தரங்க ஜெபமாக அது இருக்கிறது, "**நீ ஒரு இரகசிய அறைவீட்டுக்குள் பிரவேசித்து, கதவைப் பூட்டி விடு, நீ அவ்வாறு செய்து, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற அவர் உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்**" என்று அவர் கூறுகிறார்.

**அவ்விதமாக நாம் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, எல்லா மாய்மாலத்தையும் அதிலிருந்து எடுத்துப் போடுகிற அந்த ஜெபத்தில் ஏதோவொன்று இருப்பதாகத் தோன்றுகிறது.**

**அப்போது நாம் தனித்திருக்கும் படியாக, தேவனோடுள்ள ஒரு மேலான தொடர்பில் வந்துவிடுவது போன்று தோன்றுகிறது.**

**எப்போதாவது இயேசுவோடு தனித்திருக்க வேண்டிய அநேக நேரங்கள் என்னுடைய ஜீவியத்தில் இருந்திருக்கின்றன,** அநேகமாக உங்கள் ஜீவியத்திலும் அவ்வாறு இருந்திருக்கலாம்.

அப்போது நான் என்னுடைய காரை எடுத்து, சாலையில் ஓட்டிக் கொண்டு, அப்படியே கவனமாக பார்த்துக் கொண்டே வருவேன். **நெடுஞ்சாலையில், பரபரப்பு நிறைந்ததாக இல்லாத இடத்திற்கு நான் வந்தபிறகு, அல்லது ஏதோவொரு நாட்டுப்புற சாலையை விட்டு வெளியில் வந்தடைந்த பிறகு, அவருடைய இரக்கங்களாலும் நன்மைகளாலும் மிகவுமாய் நிறையப்படும் அளவுக்கு, நான் அப்படியே காரை நிறுத்தி, கார் சக்கரத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்து** **(held)**, **ஒரு குழந்தையைப் போல அழுவேன்** till.

10. அதுதான் தனிமையாக இருப்பது... **அநேக நேரங்களில் நான் மலைகளின் மேலே ஏறிச் செல்கிறேன்.** அங்கே (என்னோடு கூட) இருக்கும் ஒவ்வொரு மனிதனும், நான் வேட்டைக்குப் போய் கொண்டிருக்கிறேன் என்று நினைத்துக் கொள் கிறான்.

**நானோ அங்கே மேலே சென்று, ஒரு பாறையின் மேல் அமர்ந்து, என்னுடைய முழு உள்ளார்ந்த ஜீவனும், உங்களால் உணர்ந்து கொள்ளக்கூடிய, ஏதோவொன் றினால் நிறையப்படுவது போல தோன்றும் மட்டுமாக, நான் மேலே ஆகாயத்தையே பார்த்துக் கொண் டிருப்பேன்...** ஓ, அப்போது, உலகத்திலுள்ள எல்லாமே ஒரு முடிவுக்கு வந்து விட்டதாக தோன்றும்.

ஓ, தேவனோடு தனித்திருக்கும் அந்த விலையேறப்பெற்ற மணிநேரங்கள்.

**மிகவும் மகத்தான வெளிப்பாடும், உள்ளுணக்கமும் வரும் நேரம், அங்கே இருக்கும் போதுதான், அது நாம் தேவ**

**னோடு தனிமையாக இருக்கும் போது தான்.**

நாம் அதன்பேரில் இன்னும் அதிக நேரம் எடுத்துக்கொண்டிருக்கலாம், அப்போது நாம் கிறிஸ்துவுக்குள் சிறந்த ஒரு ஜீவியத்தையும், இன்னும் அதிக வெற்றிசிறந்த ஜீவியத்தையும் ஜீவித்திருப்போம் என்பதில் நான் நிச்சய முடையவனாயிருக்கிறேன்.

★★★★★

# ஜெபம்

3

